

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 142 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – மார்கழி 16 – திங்கட்கிழமை 01 ஜனவரி 2024 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 142 : Thiruvalluvar Year - 2054 - Margazhi 16 - Monday 01 January 2024 - Dak 8 Pages ₹ 5.00






நிலுவையிலுள்ள மசோதாக்கள் மற்றும் கோப்புகள் தொடர்பான வழக்கில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை அழைத்துப் பேச வேண்டும் என்று ஆளுநர் அவர்களை உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியதன் அடிப்படையில், தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் அழைப்பினையேற்று, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.12.2023) ஆளுநர் மாளிகையில், தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களை சந்தித்து, நிலுவையில் இருக்கும் பல்வேறு மசோதாக்கள் மற்றும் கோப்புகளுக்கு விரைந்து ஒப்புதல் அளித்து, அரசுக்கு அனுப்பி வைத்திட வேண்டுமென்று வலியுறுத்தினார். இச்சந்திப்பின்போது, நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டத் துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## நிலுவையில் உள்ள மசோதாக்கள் – கோப்புகளுக்கு விரைந்து ஒப்புதல் அளித்திடுவீர்!

# முதல்வர், ஆளுநரிடம் வலியுறுத்தல்!

**சென்னை, ஜன. 1-**

**உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியதன் அடிப்படையில், தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் அழைப்பு விடுத்ததையடுத்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு ஆளுநரை சந்தித்து நிலுவையிலுள்ள மசோதாக்கள் மற்றும் கோப்புகளுக்கு விரைந்து ஒப்புதல் அளிக்க வலியுறுத்தினார்.**

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு அரசின் சார்பில் அனுப்பப்பட்ட மசோதாக்கள் மற்றும் கோப்புகளுக்கு நீண்ட காலமாக ஒப்புதல் அளிக்காமல் நிலுவையில் வைத்திருப்பது தொடர்பாக, தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்க வேண்டி தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத் திருந்தது.

**முதலமைச்சருக்கு ஆளுநர் அழைப்பு!**

அவ்வழக்கில், தமிழ்நாடு ஆளுநர் அவர்களிடம் நிலுவையில் உள்ள மசோதாக்கள் மற்றும் கோப்புகள் தொடர்பாக முதலமைச் சர் அவர்களோடு ஆலோசனை நடத்திட வேண்டுமென்று உச்ச நீதிமன்றம் அறிவுறுத்தியிருந்ததன் அடிப்படையில், ஆளுநர் அவர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தார்கள்.

ஆளுநர் அவர்களின் அழைப்பினையேற்று, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (30.12.2023) ஆளுநர் மாளிகையில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டத் துறை அமைச்சர் எஸ். இரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் உயர்கல்வித் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் மற்றும் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா ஆகியோருடன் ஆளுநரைச் சந்தித்தார்.

ஆளுநருடனான இச்சந்திப்பின்போது, பல மாதங்களாக ஆளுநர் அவர்களிடம் நிலுவையில் இருக்கும் பல்வேறு கோப்புகளுக்கு விரைந்து ஒப்புதல் அளித்து, அரசுக்கு அனுப்பி வைத்திட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் ஆளுநரிடம் வலியுறுத்தினார்.

அதேபோன்று, தமிழ்நாடு சட்டமன்றம் மீண்டும் நிறைவேற்றி அனுப்பி வைத்த 10 முக்கியமான மசோதாக்களை, அரசியல் சாசனத்தில் எங்கும் குறிப்பிடாத வகையில், தேவையின்றி குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அவர்கள் அனுப்பி வைத்துள்ளதைத் திரும்பப் பெற்று, அவற்றிற்கும் விரைந்து ஒப்புதல் அளித்து, அரசுக்கு அனுப்பி வைத்திடவும் ஆளுநர் அவர்களை, முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

**அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் மீதான புகார்!**

ஊழல் வழக்குகளில் சம்மந்தப்பட்டுள்ள அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் கே.சி.வீரமணி மற்றும் எம்.ஆர். விஜயபாஸ்கர் ஆகியோர் மீது லஞ்ச ஒழிப்புத் துறை வழக்கு தொடர அனுமதி கோரி அனுப்பப்பட்ட கோப்புகளும் பல மாதங்களாக ஆளுநர் வசம் நிலுவையில் உள்ளன. அவற்றிற்கும் விரைந்து ஒப்புதல் வழங்க இச்சந்திப்பின்போது வலியுறுத்தப்பட்டது.

**அரசியல் சாசன விதிகளுக்குட்பட்டு ஆளுநர் அவர்கள் செயல்பட வேண்டுமென்றும், அப்போது தான் மாநில மக்களின் நலனுக்கும், நிருவாகத் திற்கும் பயனளிக்கக்கூடிய வகையில் ஆளுநர் அவர்களது செயல்பாடு அமையும் என்றும் முதலமைச்சர் அவர்கள், ஆளுநர் அவர்களிடம் எடுத்துரைத்தார்.**

இதில் கே.சி.வீரமணி அவர்கள் தொடர்பான கோப்பினை 15 மாதங்களுக்கு மேலாகவும், எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்கள் தொடர்பான கோப்பினை 7 மாதங்களுக்கு மேலாகவும் ஆளுநர் அவர்கள் நிலுவையில் உள்ளதும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தில் காலியாக உள்ள உறுப்பினர் பதவிகளுக்கு உறுப்பினர்களை நியமனம் செய்வது தொடர்பான கோப்பும், நீண்ட காலமாக ஆளுநர் அவர்களிடம் நிலுவையில் உள்ளது குறித்தும் தெரிவிக்கப்பட்டு அவற்றிற்கு ஒப்புதல் அளித்து திரும்ப அனுப்பிவைக்க கேட்டுக்கொள்ளப்பட்டது.

பொதுவாக, அரசியல் சாசன விதிகளுக்குட்பட்டு ஆளுநர் அவர்கள் செயல்பட வேண்டுமென்றும், அப்போதுதான் மாநில மக்களின் நலனுக்கும், நிருவாகத்திற்கும் பயனளிக்கக் கூடிய வகையில் ஆளுநர் அவர்களது செயல்பாடு அமையும் என்றும் முதலமைச்சர் அவர்கள், ஆளுநர் அவர்களிடம் எடுத்துரைத்தார்.

**தாமதங்களை தவிர்த்திடுவீர்!**

ஆளுநர் அவர்களிடம் நிலுவையில் உள்ள மசோதாக்கள் மற்றும் கோப்புகள் தொடர்பாக அவர் கோரிய அனைத்து விவரங்களும், சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்கள் மற்றும் அலுவலர்களால் ஆளுநர் அவர்களுக்கு நேரிலும், எழுத்துப்பூர்வமாகவும் அளிக்கப்பட்டுள்ள நிலையில், உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ள கருத்துக்களை ஆளுநர் அவர்கள் மனதில்கொண்டு, நிலுவையில் உள்ள மசோதாக்களுக்கும், கோப்புகளுக்கும் உரிய காலத்தில் ஒப்புதல் வழங்கிட வேண்டுமென்றும், வருங் காலங்களில் இதுபோன்ற தாமதங்களை ஆளுநர் அவர்கள் தவிர்த்திட வேண்டுமென்றும் முதலமைச்சர் அவர்கள், ஆளுநர் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

இந்த ஆலோசனையின் போது, அரசின் சார்பாக மேற்படி கருத்துக்களை முதலமைச்சரும், அமைச்சர் பெருமக்களும், தலைமைச் செயலாளர் அவர்களும் விரிவாக எடுத்துக் கூறினர்.

**உயர் அமைப்புகள் மீது மதிப்பும், மரியாதையும்!**

முதலமைச்சர் அவர்கள் ஆளுநருக்கு கடிதம் ஒன்றையும் அப்போது வழங்கினார். இக்கடிதத்தில் அரசியல் சாசனத்தின்படி அமைக்கப்பட்டுள்ள அனைத்து உயர் அமைப்புகளின் மீதும் தனக்கு மிக உயர்ந்த மதிப்பும், மரியாதையும் வைத்திருப்பதாகத் தெரிவித்துள்ள முதலமைச்சர் அவர்கள், நிலுவையிலுள்ள மசோதாக்கள் மற்றும் கோப்புகள் குறித்து தெரிவித்தது, மாநில நிர்வாகம் மற்றும் பொதுமக்களின் நலன் கருதி அவற்றிற்கு விரைந்து ஒரு தீர்வு கிடைக்கவேண்டும் என்ற நோக்கத்தில் தான் என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

---

### நமது ‘திராவிட மாடல்’ அரசின் வெற்றிப் பயணம்

# வரும் புத்தாண்டில் புதிய சாதனை உச்சங்களைத் தொடும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - 2024 ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜன. 1 -**

**தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 2024 ஆங்கிலப் புத்தாண்டையொட்டி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், “நமது ‘திராவிட மாடல்’ அரசின் வெற்றிப் பயணம், வரும் புத்தாண்டில் புதிய சாதனை உச்சங்களைத் தொடும்” எனக் குறிப்பிட்டுள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் - 2024 ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி வருமாறு:-



**புதிய சிந்தனை, புதிய இலக்குகளுக்கான வாசலைத் திறந்து வைத்து நம்பிக்கையின் ஒளிக்கதிர்களுடன் பிறக்கிறது இனிய புத்தாண்டு! தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வழியில், சமத்துவம், சகோதரத்துவம், சமூக நீதிக்கான பயணத்தில் எத்தனை தடைகள் எதிர்ப்பட்டாலும் அவற்றைத் தகர்த்தெறிந்து முன்னேறும் நமது திராவிடமாடல் அரசின் வெற்றிப் பயணம், வரும் புத்தாண்டில் புதிய சாதனை உச்சங்களைத் தொடும். அதற்கான நம்பிக்கையும் உறுதியும் புத்தாண்டில் நிறைந்துள்ளது.**

**“எல்லார்க்கும் எல்லாம்” என்ற நமது இலட்சியம் நிறைவேறும் நிறைவான ஆண்டாக இந்தப் புத்தாண்டு அமையட்டும்! அனைவருக்கும் எனது இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!**


இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

---

### தமிழினத் தலைவர்

# கலைஞர் நூற்றாண்டு சிறப்பிதழ் (8)

## ஜனவரி 3 - அன்று வெளிவருகிறது!



**தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டினையொட்டி, 2023 ஜூன் 3 முதல், ஒவ்வொரு மாதமும் 3 ஆம் தேதியன்று “முரசொலி சிறப்பிதழ்” வெளிவரும் என்று ஏற்கனவே அறிவிக்கப் பட்டுள்ளது.**

**அந்த அறிவிப்பிற்கு ஏற்ப, ஜனவரி 3 புதன் கிழமை முரசொலி சிறப்பிதழ், “கல்வியாளர்கள் பார்வையில் கலைஞர்” என்ற தலைப்பில், முரசொலியின் இணைப்பாக வெளிவருகிறது.**

**- ஆசிரியர்.**

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 01-01-2024

# குஜராத்தும் மதுவிலக்கும்

மதுவிலக்கு என்றாலே குஜராத்தைதான் மேற்கோள் காட்டுவார்கள். இதோ இப்போது குஜராத் மாநிலத்தில் மதுவிலக்குக்கு விடை கொடுத்துவிட்டது பா.ஜ.க. அரசு. 'காந்தி பிறந்த மண்ணில்' மதுவைப் புகுத்தி விட்டது பா.ஜ.க.

மணிப்பூர் மாநிலத்தில் 32 ஆண்டுகளாக மதுவிலக்கு அமலில் இருந்து வருகிறது. அந்த மதுவிலக்குக் கொள்கையை மாநில பா.ஜ.க. அரசு கடந்த மாதம் விலக்கிக் கொண்டு விட்டது. இதனைத் தொடர்ந்து குஜராத் மாநிலத்திலும் மது புகுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக குஜராத் மாநில மதுவிலக்கு மற்றும் கலால் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், "உலக முதலீட்டாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்களுக்கு உலகளாவிய வணிக சூழலை வழங்குவதற்காக கிஃப்ட் சிட்டி பகுதியில் 'ஒயின் மற்றும் உணவு' வசதிகளை அனுமதிக்க தடை விதிகளை மாற்ற முக்கிய முடிவு எடுக்கப்பட்டுள்ளது" என்று கூறப்பட்டுள்ளது.

1960 மே 1 ஆம் தேதி குஜராத் மாநிலம் உருவானது. அப்போது அங்கு காங்கிரஸ் கட்சி ஆட்சி இருந்தது. அண்ணல் காந்தியடிகள் பிறந்த மண் என்பதால் அங்கு மதுவிலக்கு அமலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் காந்தி நகரில் உள்ள இண்டர்நேஷனல் பைனான்ஸ் டெக் சிட்டியில் மதுவிலக்கை விலக்கிக் கொண்டு விட்டது மாநில பா.ஜ.க. அரசு. குஜராத் மாநில வளர்ச்சியை மனதில் வைத்தும், டெக் சிட்டிக்கு வர இருக்கும் பன்னாட்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் வசதிக்காகவும் இந்த முடிவை எடுத்துள்ளார்கள். இதே போல் எங்களுக்கும் விதிவிலக்கு வேண்டும் என்று மற்ற தொழில் வளர்ச்சி நிறுவனங்களும் கோரிக்கை வைத்துள்ளன. இனி படிப்படியாக அனைவர்க்கும் திறந்து விடப் போவதாகச் சொல்கிறார்கள்.

குஜராத் ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் இசுதான் கத்வி வெளியிட்டுள்ள அறிக்கையில், **"காந்தியின் குஜராத்தில் ஆட்சியில் இருக்கும் பா.ஜ.க. அரசு காந்திஜியை மட்டுமல்ல, ஒட்டுமொத்த குஜராத் மக்களையும் அவமதித்துள்ளது. குஜராத் முதல்வர் பங்களாவில் இருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள கிஃப்ட் சிட்டியில் மது அருந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஊழியர்கள், பார்வையாளர்கள் மற்றும் அதிகாரிகள் இங்கு சென்று குடிக்கலாம், அங்கிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள அகமதாபாத்திற்கு மீண்டும் திரும்பி வரும்போது குடித்ததற்காக வழக்குப்பதிவு செய்யப்படலாம்."** என்றும் அவர் கிண்டலாகச் சொல்லி இருக்கிறார்.

இந்த நிலையில், 'குஜராத் மாநிலத்தில் மது விலக்கு என்பதே ஒரு நாடகம்தான், மது விற்பனை என்பது மறைமுகமாக நடந்தது அது இப்போது வெளிப்படையாக மீறப்படுவதைத்தான் இனி பார்க்கப் போகிறோம்' என்று செய்தி நிறுவனங்கள் எழுதத் தொடங்கி இருக்கின்றன.

பி.பி.சி. வெளியிட்டுள்ள கட்டுரையில், **"குஜராத்தில் 2011-12 முதல் 2017-18 வரை உள்ள காலகட்டத்தில் 3.85 லட்சம் லிட்டர் மதுபானம் விற்பனை செய்யப் பட்டுள்ளதாக குஜராத் மாநில போதைப்பொருள் மற்றும் கலால் துறை தகவல் அறியும் சட்டப்படி ஒருவருக்கு பதிலளித்துள்ளது. உரிமம் பெற்ற கடைகளின் மது விற்பனையில் அகமதாபாத், வதோதரா மற்றும் கட்ச் ஆகியவற்றை தொடர்ந்து சூரத் முன்னணியில் உள்ளது**" என்று கூறப்பட்டுள்ளது.

'டைம்ஸ் ஆஃப் இந்தியா' வெளியிட்டுள்ள செய்திப்படி, ஏப்ரல் 2019 முதல் டிசம்பர் 2020 வரையில் ரூ.215 கோடி மதிப்புள்ள மதுபாட்டில்கள் குஜராத்தில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. குஜராத்தின் வரலாற்றில் எப்போதும் இல்லாத வகையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மதுவின் புழக்கம் மிக அதிகமாக இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள் அங்குள்ள மதுவுக்கு எதிரான செயல்பாட்டாளர்கள். 2017 ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தலையொட்டிய சோதனைகளில் மட்டும் அங்கு 10 லட்சம் லிட்டர் மது கைப்பற்றப்பட்டிருக்கிறது. இதன் மதிப்பு ரூ. 23 கோடி!

**"ஆரம்ப காலத்தில் குஜராத்தில் மதுவிலக்குச் சட்டம் கடுமையாக இருந்தது உண்மைதான். ஆனால், 2006ம் ஆண்டு மோடி முதல்வராக இருந்த போது முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் 'Vibrant Gujarat' என்கிற திட்டத்தின் அடிப்படையில் மதுவிலக்குச் சட்டத்தில் சில சலுகைகள் கொண்டு வரப்பட்டன. அதன்படி வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் குஜராத்தில் மது அருந்தத் தடை எதுவும் இல்லை. இதற்கு பின்புதான் குஜராத்தில் சட்டவிரோத மதுப் புழக்கம் அதிகரித்தது. இப்போதும் குஜராத்துக்கு வெளியே இருந்து வருபவர்கள் தங்களது முகவரிச் சான்று அல்லது தங்கும் விடுதியின் மேலாளர் அளிக்கும் கடிதத்தின் அடிப்படையில் மது வாங்கிக் கொள்ளலாம்." என்று குஜராத்தில் சட்டவிரோதமாக புழங்கும் மதுவுக்கு எதிராக கடந்த எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக போராடி வரும் மீனா படேல் பேட்டி அளித்ததாக செய்தி ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

"குஜராத்தில் சட்ட விரோத மதுவிற்பனை மிகப் பெரிய வணிகமாக உருவெடுத்துள்ளது. ராஜஸ்தான் மற்றும் மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களிலிருந்து சட்டவிரோதமாக இங்கு கடத்தி வரப்படும் மது இரட்டை விலை வைத்து விற்பனை செய்யப்படுகிறது. அதுதவிர, குஜராத்திலேயே எரிசாராயத்தையும் எசன்ஸையும் கலந்து மது உற்பத்தி செய்கிறார்கள்" என்றும் இவர் சொல்லி இருக்கிறார். **"அகமதாபாத்தில் சுமார் 11 நட்சத்திர விடுதிகளின் மதுக்கூடங்களில் மதுவின் விலை சுமார் 10 மடங்கு அதிகம்."** என்று பேட்டி அளித்துள்ளார்கள் குஜராத் பத்திரிக்கையாளர்கள்.

**பிற்படுத்தப்பட்ட சமூகங்களின் தலைவரான அல்பேஷ் தாக்கூர், "கடந்த 2016-ம் ஆண்டு அக்டோபர் மாதம் சூரத் அருகிலிருக்கும் வரேலி கிராமத்தில் சட்ட விரோதமாக தயாரிக்கப்பட்ட மதுவை அருந்தியதில் 15 பேர் உயிரிழந்தார்கள். கடந்த 2012ம் ஆண்டு மட்டுமே மிக அதிகளவாக 143 பேர் சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட மதுவை அருந்தி உயிரிழந்திருக்கிறார்கள். இங்கு ஒவ்வோர் ஆண்டும் சராசரியாக 7.50 லட்சம் லிட்டர் எரிசாராயம் கைப்பற்றப்படுகிறது. இவையும் கூட பின்வழியாக கள்ள மது தயாரிப்பாளர்களுக்கு கைமாற்றப் படுகிறது**" என்று சொல்லி இருக்கிறார்.

மதுவிலக்கு மாநிலத்தின் முகத்தை வெளிப்படையாகவே கிழித்தெறியத் தொடங்கி விட்டது குஜராத் பா.ஜ.க. அரசு.

ஐம்பூதங்கள் பற்றிய ஐந்து நெடுங்கவிதைகளின் பெருந்தொகுப்பு!

# கவிப்பேரரசு வைரமுத்துவின் 'மகா கவிதை!'

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று வெளியிடுகிறார்!

**சென்னை, ஜன. 1- கவிப்பேரரசு வைரமுத்துவின் புதிய படைப்பான 'மகா கவிதை' நூலை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (ஜனவரி 1 ஆம் தேதி) வெளியிடுகிறார்.**

**சென்னைக் காமராசர் அரங்கில் மாலை 6 மணிக்கு விழா நடைபெறுகிறது. நூலின் முதற்படியை ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் பெற்றுக் கொள்கிறார். கலைஞானி கமல்ஹாசன், விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை இருவரும் வாழ்த்துரை வழங்குகிறார்கள். கவிப்பேரரசு வைரமுத்து ஏற்புரை ஆற்றுகிறார்.**

'மகா கவிதை' என்பது நிலம், நீர், காற்று, தீ, வெளி என்ற ஐம்பூதங்கள் பற்றிய ஐந்து நெடுங் கவிதைகளின் பெருந்தொகுப்பு ஆகும். கவிப்பேரரசு வைரமுத்துவின் 30 மாதக் கடும் உழைப்பினால் உருவானது இந்தக் கவிதைநூல்.

"அகவியல் - புறவியல் - அறிவியல் இறையியல் என்றெல்லாம் பேசிய தமிழ்க்கவிதை முதன் முதலில் முழுக்க அறிவியல் பேசுகிறது. ஐம்பூதங்களின் அறிவியலும் ஈராயிரமாண்டு நீண்டு கிடக்கும் தமிழ்க் கவிதையின் அழகியலும் ஒருங்கிணைந்த பெருங்கவிதை மகா கவிதை. இளைய தலைமுறையின் எதிர்காலத்திற்கு இந்த மகா கவிதை விஞ்ஞான வாசலைத் திறந்துவிடும்" என்று கவிப்பேரரசு வைரமுத்து உறுதிபடத் தெரிவிக்கிறார்.



**ரூ.5 லட்சம் பரிசு!**

'மகா கவிதை' என்ற தலைப்பின் ஐந்து எழுத்துக்களிலும் இந்த நூலின் ஐந்து உள்ளடக்கங்கள் மறைந்திருக்கின்றன. அவற்றைக் கண்டுபிடித்துச் சரியான விடை சொல்பவர்க்கு ஐந்து லட்சம் பரிசு - என்று கவிப்பேரரசு வைரமுத்து ஏற்கெனவே அறிவித்திருந்தார்.

அந்தப் போட்டியில் வெற்றிபெற்றவர்கள் மேடையிலேயே அறிவிக்கப்படுவார்கள் மற்றும் முதலமைச்சர் கரங்களால் பரிசுபெறுவார்கள்.

கவிப்பேரரசு வைரமுத்துவின் பதிப்பகமான 'சூர்யா இலக்கியம்' இந்நூலை வெளியிடுகிறது. வெற்றித் தமிழர் பேரவைத் தோழர்கள் விழாவிற்கான ஏற்பாடுகளை முனைந்து செய்து வருகிறார்கள்.

காங்கேயம் - குண்டடம் ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.2.63 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப்பணிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார்!

திருப்பூர், ஜன. 1 - திருப்பூர் மாவட்டம், காங்கேயம் ஒன்றியம், படியூர் ஊராட்சியில் பொதுப் பணித்துறையின் சார்பில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஆய்வகம், அவசர வார்டு, மருந்தகம், மருந்துகள் வைப்பறை, பிரசவ அறை, மருத்துவ அலுவலர் அறைகள், கழிப்பறை என புதிய கட்டடங்கள், ரூ.15.26 இலட்சம் மதிப்பீட்டில் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகம் மற்றும் குடியிருப்பு கட்டடம், 15வது நிதிக்குழு மானியம் திட்டத்தின் கீழ் ரூ.54.75 இலட்சம் மதிப்பீட்டில் சிவன்மலை ஊராட்சி, சாவடிப்பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் வட்டார பொது சுகாதார மையம் மற்றும் ரூ.32.80 இலட்சம் மதிப்பீட்டில் பொத்தியபாளையம் ஊராட்சி, பெரிய இல்லியம் ஊராட்சி ஒன்றிய துவக்க பள்ளியில் புதிதாக இரண்டு வகுப்பறை கொண்ட கட்டடம் கட்டும் பணி, குண்டடம் ஒன்றியம், செங்கோடம்பாளையம் ஊராட்சி, ஊதியூரில் 15வது நிதிக்குழு சுகாதார மானியம் திட்டத்தின் கீழ் ரூ.40.20 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலையம் கட்டும் பணி என மொத்தம் ரூ.2.63 கோடி மதிப்பீட்டில் புதிய திட்டப் பணிகளை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன் தலைமையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் துவக்கி வைத்தார்.

அமைச்சர் தெரிவித்ததாவது :

தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் உயர்கல்வி சேர்க்கையினை அதிகரிக்கும் பொருட்டு அரசு பள்ளிகளில் 6 ம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ் படிப்பு /பட்டயப்படிப்பு / பட்டப்படிப்பு/ தொழிற் கல்வி ஆகியவற்றில் இடை நிற்றல் இன்றி கல்வி பயின்று முடிக்கும் வரை மாதம் ரூ.1000/ அவர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட்டு வரும் புதுமைப் பெண் என்கிற திட்டத்தை துவக்கி வைத்தார்கள். அதேபோல் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து வசதி, மகளிர் சுயஉதவிக்குழுக்கள் கடன் தள்ளுபடி, நகைக்கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குதல், பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம், பள்ளிக்குழந்தைகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், வருமுன் காப்போம் திட்டம், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, மக்களை தேடி மருத்துவம் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 18.12.2023 அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் மக்களின் முதல்வர் திட்டத்தை தொடங்கி வைக்கப்பட்டதை தொடர்ந்து திருப்பூர் மாவட்டத்தில் பல்வேறு துறைகளின் மூலம் கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, பெறப்பட்ட மனுக்களுக்கு 30 நாட்களில் தீர்வு காணப்படும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் காங்கேயம் ஒன்றியக் குழுத்தலைவர் த.மகேஷ்குமார், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) ஜெகதீஸ்குமார், உன்னிடம் ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.சந்திரசேகரன், சிவ.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் கருணாகரன், பேரூர் கழக செயலாளர் அன்பு, காங்கேயம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.கே.சிவானந்தன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் கே.சண்முகசுந்தரம், காங்கேயம் வட்டார வளர்ச்சி அலுவலர் விமலாவதி, படியூர் ஊராட்சி மன்றத்தலைவர் ஜீவிதா சண்முகசுந்தரம் உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பெரம்பலூரில் தொ.மு.ச. பணியாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## குன்னம் சி.இராஜேந்திரன் - எம்.ராஜகாந்தம் - இரா.ப.பரமேஷ்குமார் பங்கேற்பு!

பெரம்பலூர், ஜன, 1 - பெரம்பலூர் மாவட்டம், நாரணமங்கலம் ஊராட்சியில் உள்ள எம்.ஆர்.எஃப் தனியார் டயர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையில் பணிபுரியும் வெல்ஃபர் யூனியன், தொ.மு.ச. (TCC PLANT) பணியாளர்கள் ஆலோசனைக் கூட்டம், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில், எம்.ஆர்.எஃப்., தொ.மு.ச.துணைத் தலைவர் ஆர்.ரெங்கசாமி வரவேற்புரையில் நடைபெற்றது.

இதில் மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் தொ.மு.ச. தலைவர் எம்.ராஜகாந்தம் இருவரும் கலந்து கொண்டு, ஊதிய ஒப்பந்தம், தொழிலாளர் நலன் குறித்து பேசினார்கள். இதில் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தொ.மு.ச. செயலாளர் கார்த்திக், துணைத் தலைவர் செல்லதுரை, சங்க இணைச் செயலாளர்கள் கணேசன், ஜான் பிரிட்டோ, சங்க பொருளாளர் செந்தில்குமார், வெல்ஃபர் யூனியன் செயலாளர் ராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் 31.12.2023 அன்று ஊதிய ஒப்பந்தம் முடிகிறது. அடுத்த 3 ஆண்டுகளுக்கான ஊதிய ஒப்பந்தம் குறித்து தொழிற்சாலை நிர்வாகத்தோடு விரைவில் பேசி முடிப்பது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# மெரினாவில் புத்தாண்டு தினத்தையொட்டி வாகனங்கள் செல்ல தடை!

சென்னை, ஜன.1- சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் தெற்கு கூடுதல் ஆணையர் பிரேம் ஆனந்த் சின்கா, வடக்கு கூடுதல் ஆணையர் அஸ்ரா கர்க் செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்கையில் ஆங்கில புத்தாண்டு தினத்தை முன்னிட்டு மெரினாவில் வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்படுகிறது என்று பேட்டியளித்ததையடுத்து நேற்று சென்னை மெரினாவில் இரவு 8 மணிக்கு மேல் வாகனங்கள் செல்ல தடை விதிக்கப்பட்டது.

அவரது உத்தரவையடுத்து நேற்று இரவு 1 மணிக்குள் புத்தாண்டு கொண்டாட்டத்தை முடித்துக் கொள்ளப் பட்டது.

குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் குறித்து கட்டுப்பாட்டு அறைக்கு வரும் தகவலின் அடிப்படையில் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவோர், சாலைகளில் சாகசங்களில் ஈடுபடுவோரின் ஓட்டுனர் உரிமம் பறிமுதல் செய்யப்பட்டது.

புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது கடற்கரை பகுதிகளில் மது குடிக்க அனுமதி கிடையாது என தெரிவித்தனர்.



திருநெல்வேலி மாவட்டம், ரெட்டியார்பட்டி பகுதியில் அமைந்துள்ள நியாயவிலைக் கடையில் கன மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவி ரூபாய் 6000 மற்றும் 5 கிலோ அரிசி வழங்கப்படுவதை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். உடன் செய்தித்துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், மாவட்ட ஆட்சியர் மரு.கா.ப.கார்த்திகேயன், சட்டப்பேரவை முன்னாள் தலைவர் மாவட்டச் செயலாளர் இரா. ஆவுடையப்பன் உள்பட அரசு அதிகாரிகள். கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன் மதுரை மாநகராட்சி வெள்ளிவீதியார் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகள் சிறப்பு முகாமில் மாற்றுத்திறனாளிகளிடம் இருந்து மனுக்களை பெற்று நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மா.சௌ.சங்கீதா, மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி, பொன்வசந்த் கலந்து கொண்டனர்.

# ஆக்கத்தின் புத்தாண்டே! ஊக்கத்தின் வித்தாண்டே!

**பேராசிரியர் மா.செல்வராசன்**

ஆங்கிலப் புத்தாண்டே!
அனைவரும் வரவேற்கும்
பாங்கான நல்லாண்டே;
பாரெலாம் செல்லாண்டே!

தேங்கிய வாழ்விலே
தெம்பினை ஊட்டுதற்கு,
ஏங்கிய ஏக்கங்கள்
இல்லாமல் ஓட்டுதற்கு,
தாங்கிய துன்பங்கள்
தடமின்றிப் போவதற்கு
ஓங்கிய அழுகுரல்
உவகையாய்ப்
பொலிவதற்கு
வேங்கடம் தாண்டிய
விந்தியத்தின் வடக்கிலே
மூங்கையாய் வேடமிட்டு
மோதவிடும் போர்வழிகள்
ஈங்கென்றும்
இராமன்போல்
இழிவான கரவிலே
வீங்கிய பகைக்கூட்டம்
விடுகின்ற புகைமூட்டம்
நீங்கியே கலைவதற்கு
நிலையின்றித்
தொலைவதற்கு
நீங்கிடாக் கட்டுகள்
நில்லாமல் அறுவதற்குத்
தூங்கிடா தெழுப்பியே
துணைவரும்
தொடராண்டே!

மூங்கிலில் எழுகின்ற
முருகிசைப் பண்ணாக,
பூங்கமழ் சோலைகள்
பொழிந்திடும் மணமாக,
பூங்குயில் பாட்டாக,
பொழில்மயில் ஆடலாக,
தேங்கனி குலுங்கிட,
செங்கரும்பு கொழித்திட,
பாங்கான வயல்களில்
பசுமையே மிகுந்திட,
தீங்கதிர் ஒளிர்ந்திட,
தேனிலா வளர்ந்திட
யாங்கணும் இன்பமே
யாவிலும் இனிமையே
ஓங்கியே உயர்ந்திட
உலகாண்டே வருகவே!
நீங்காத போர்களால்
நெடும்பகை வளர்ந்திடத்
தாங்காத துயரங்கள்
தனிப்பல அவலங்கள்
தூங்காத இரவுகள்
தொடர்ந்திடும் கரவுகள்
தீங்கான நோய்,திருட்டு
தீராத கொலை,கொள்ளை
ஈங்கின்றிப் போகுமோ?
இன்னல்கள் நீங்குமோ?
ஆங்காலம் ஆகுமோ?
அமைதிஇன்பம் சேருமோ?
ஏங்காமல் ஏங்குகிற
இவ்வைய மக்கள்தாம்
வீங்காமல் வீங்கியே
விடும்கண்ணீர் மாறுமோ?

ஓங்கிவரும் புத்தாண்டே!
உலகோர்க்கு வித்தாண்டே!
பாங்கெலாம் ஓயாசிசு
பாலைவனச் சோலைகள்
ஈங்கெங்கும் படரவே
இன்பங்கள் தொடரவே
நீங்காமல் எங்களுடன்
நேயமாய் வருமாண்டே!

தாங்கியே வையந்தான்
தழைத்திடச் செய்குவாய்;
வாங்கியே நன்மைகள்
வரம்பின்றிப் பெய்குவாய்;
ஏங்கிடாது எவருமே
எழுந்தியங்க உய்குவாய்;
தீங்கிலா உலகிங்குத்
திகழவே வைகுவாய்!

கோங்கிலா மலருண்டோ?
குளிரிலா நிலவுண்டோ?
தாங்கிடா நிலமுண்டோ?
தவழ்ந்திடா முகிலுண்டோ?
ஓங்கிடா வானுண்டா?
உலவிடா வளியுண்டா?
ஆங்கிலப் புத்தாண்டே,
ஆக்கமின்றி நீ உண்டா!

### புதுக்கோட்டை மாவட்டத்தில் சாலை விபத்தில்

# உயிரிழந்த நால்வரின் குடும்பத்தினருக்கு தலா ரூ. 2 லட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜன. 1 -**

**புதுக்கோட்டை மாவட்டம் நமண சமுத்திரம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

முதல்வரின் அறிவிப்பு வருமாறு:-

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலுக்கா, நமணசமுத்திரம் அருகே திருச்சி - காரைக்குடி தேசிய நெடுஞ்சாலையில் நேற்று முன்தினம் (30.12.2023) அதிகாலை சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களிலிருந்து மூன்று வெவ்வெறு நான்கு சக்கர வாகனங்களில் வெவ்வேறு கோவிலுக்கு சென்றுக் கொண்டிருந்தவர்கள், தேநீர் அருந்துவதற்காக சாலையோரத்தில் வாகனங்களை நிறுத்திவிட்டு தேநீர் அருந்திகொண்டிருந்தபோது, சிமெண்ட் ஏற்றி கொண்டு வந்த லாரி எதிர்பாராதவிதமாக மோதிய விபத்தில் திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை தாலுக்கா, பனஞ்சேரியை சேர்ந்த ஜெகநாதன் (வயது 60) த/பெ.பாலன் மற்றும் திருமதி. சாந்தி (வயது 55), க/பெ.சீனிவாசன், திருவள்ளூர் மாவட்டம், திருமுல்லைவாயில், எல்லையம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த கோகுலகிருஷ்ணன் (வயது 26) த/பெ.ராமநாதன் மற்றும் சென்னை மாவட்டம், அமைந்தகரையைச் சேர்ந்த சதீஷ் (வயது 25) த/பெ. சக்திவேல் ஆகிய நால்வரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள்.

மேலும் திருவள்ளூர் மாவட்டம், மதுரவாயல், பாக்கியலட்சுமி நகர், அன்னை இந்திரா காந்தி தெருவைச் சேர்ந்த சுரேஷ் (வயது 39), த/ப.ஜெயராமன் என்பவர் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் உயிரிழுந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

மேலும், இவ்விபத்தில் பலத்த காயமடைந்து புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

இவ்விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாயும், இலேசான காயமடைந்தவர்களுக்கு தலா ஐம்பதாயிம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### பக்தர்கள் நன்கொடை வழங்குவதை எளிதாக்கும் வகையில்

# விரைவுத் தகவல் குறியீடு மூலம் நன்கொடை செலுத்தும் வசதி!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்!

சென்னை, ஜன. 1-

பக்தர்கள் நன்கொடை வழங்குவதை எளிதாக்கும் வகையில் விரைவுத் தகவல் குறியீடு (QR Code) மூலம் நன்கொடை செலுத்தும் வசதி அறிமுகம் செய்து 7,233 திருக்கோயில்களுக்கு இணையவழி நன்கொடை செலுத்தும் வசதி விரி வாக்கத்தை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று முன்தினம் (30.12.2023) ஆணையர் அலுவலகத்தில் திருக்கோயில்களுக்கு பக்தர்கள் நன்கொடைகள் வழங்குவதை எளிதாக்கும் வகையில் விரைவுத் தகவல் குறியீடு (QR Code) மூலம் நன்கொடை செலுத்தும் வசதியினை அறிமுகம் செய்து, 7,233 திருக்கோயில்களுக்கு விரிவு படுத்தப்பட்டுள்ள இணையவழி நன்கொடை செலுத்தும் வசதியினை தொடங்கி வைத்து, இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் தெய்வ திருவுருவப் படங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ள 2024 ஆம் ஆண்டிற்கான நாட்காட்டியினை வெளியிட்டார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

வளர்ந்து வரும் நாகரிகத்துக்கு ஏற்ப விரைவாக அனைத்து பணிகளையும் மேற்கொள்கின்ற வகையில் இணைய வழியாக திருக்கோயில்களுக்கு பக்தர்கள் நன்கொடை வழங்கும் வசதி இந்த ஆட்சி ஏற்பட்டவுடன் 2021 ஆம் ஆண்டு முதற்கட்டமாக 47 முதுநிலை திருக்கோயில்களில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்மூலம் கடந்த 2 ஆண்டுகளில் சுமார் ரூ.5.61 கோடி நன்கொடையாக பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் பக்தர்களிடம் பெரும் வரவேற்பை பெற்றதால் இன்றைய தினம் 7,233திருக்கோயில்களுக்கு இணையவழி நன்கொடை செலுத்தும் வசதி விரி வுப் படுத்தப்பட்டுள்ளதோடு, விரைவுத் தகவல் குறியீடு (QR Code) மூலம் நன்கொடை செலுத்தும் வசதியும் இன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இது நன்கொடை வழங்குபவர்கள் எந்தவித அலைக்கழிப்பிற்கும் ஆளாகாமல் அவர்கள் நினைத்த இடத்தி லிருந்து திருக்கோயிலுக்கு நன்கொடை அளிப்பதற்கு பேருதவியாக இருக்கும். பக்தர்களும் இதனை மனமுவந்து வரவேற்பார்கள். நன்கொடை வழங்கியதற்கான ஒப்புகை, மின்னணு இரசீது மற்றும் அன்னதான நன்கொடைக்கான வருமான வரி சலுகை சான்றிதழ் ஆகியவை குறுஞ்செய்தி மூலம் நன்கொடையாளருக்கு அனுப்பி வைக்கப்படும். குறுஞ்செய்தியில் வரப்பெற்ற தகவலின் இணைப்பு மூலம் அதற்கான இரசீது மற்றும் சான்றிதழை பெற்றுக் கொள்ளலாம்.

இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 2024 ஆம் ஆண்டிற்கான நாட்காட்டி (Calendar) வெளியிடப்பட்டுள்ளது. இந்த நாட்காட்டி அனைத்து அரசு அலுவலகங்களிலும் கட்டணமில்லாமல் வழங்கப்படுவதோடு, முதுநிலை திருக்கோயில்கள் உள்ளிட்ட அனைத்து திருக்கோயில்களிலும் ரூ.100 என்ற கட்டணத்தில் விற்பனை செய்யப்படும்.

இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு இதுவரையில் 1,224 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. அதேபோல் ரூ.5,550 கோடி மதிப்பிலான 6,048.30 ஏக்கர் திருக்கோயில் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. திருக்கோயில் திருப்பணிகள் மற்றும் நில மீட்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் வகையில் மாதந்தோறும் ஆணையர் அலுவலகத்தில் சீராய்வுக் கூட்டம் நடத்தப்படுகின்றது. அதேபோல் கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள வழங்கப்பட்டு வரும் ரூ.2 லட்சம் நிதியுதவிக்கு சரக்கு மற்றும் சேவை வரி (GST) பிடித்தத்திலிருந்து விலக்கு பெறுவதற்கு துறையின் சார்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் மாணவர்களை தொன்மையான திருக்கோயில்களுக்கு சுற்றுலா அழைத்து செல்வது குறித்த கோரிக்கை வரவேற்கத் தகுந்த ஆலோசனையாகும். பள்ளிகளில் அனைத்து மதத்தினரும் பயின்று வருவதால் அதற்கான சூழ்நிலையை பொறுத்து இதனை செயல்படுத்துவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும்.

ஆங்கில புத்தாண்டு தினத்தன்று (இன்று) சிறப்பு வழிபாடு நடைபெறும் திருக்கோயில்களில் இந்தாண்டும் அவை வழக்கம்போல் நடைபெறும். ஒருசில திருக்கோயில்களில் நள்ளிரவு 12 மணிக்கும் சில திருக்கோயில்களில் அதிகாலையும் நடை திறக்கப்பட்டு வழிபாடு நடக்கும். அந்த நடைமுறைகளில் மாற்றங்கள் செய்திட இந்து சமய அறநிலையத்துறை அலுவலர்கள் எவ்வித அழுத்தமும் தரமாட்டார்கள். வழக்கமான நடைமுறையே பின்பற்ற அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க. வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி.ஹரிப்ரியா, மாவட்ட வருவாய் அலுவலர்கள் நிலையிலான தனி அலுவலர்கள் (ஆலய நிலங்கள்) திருமதி கோ.விஜயா, த.குமரேசன், திருமதி சு. ஜானகி, இணை ஆணையர்கள் மற்றும் வங்கி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை மாவட்டம் - அறந்தாங்கியில்

# 216 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனை பட்டா!

## அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினர்!

புதுக்கோட்டை ஜன1-

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி நகராட்சியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில், அறந்தாங்கி கோட்ட அளவில் 177 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனை பட்டாக்களையும், 20 பயனாளிகளுக்கு பட்டா மாறுதல் மேல்முறையீட்டு மனுக்கள் மீதான ஆணைகளையும் மற்றும் 19 பயனாளிகளுக்கு கிராம கணக்குகளில் பதிவின்றி இருந்த விலையில்லா வீட்டுமனை பட்டாக்களுக்கு சிட்டா, அடங்கல் ஆகியவற்றிற்கான ஆணைகளையும் மொத்தம் 216 பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனை பட்டா, பட்டா மாறுதல் மற்றும் சிட்டா, அடங்கல் ஆகியவற்றிற்கான ஆணைகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத் துறை அமைச்சர் எஸ்.ரகுபதி , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் வழங்கினார்கள்.

பின்னர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது:-

மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றை பூர்த்தி செய்வதே மக்களாட்சியின் தத்துவமாகும். அதனடிப்படையில் இருப்பிடத்தின் தேவையினை பூர்த்தி செய்திடும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை பொதுமக்களுக்கு பயனளிக்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றார்.

பின்னர், சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் , துவரடிமனை பகுதியில், பகுதி நேர நியாய விலைக்கடையினை திறந்து வைத்தார். இதன்மூலம் இப்பகுதி பொதுமக்கள் குடிமைப் பொருட்கள் பெறுவதற்கு நீண்ட தூரம் சென்று வருவது தவிர்க்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுகளில், மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் சிவக்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பின உதயம் சண்முகம், அறந்தாங்கி நகர்மன்றத் தலைவர் ஆனந்த், அறந்தாங் ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஜெயமங்கலம் பி. அய்யாவு

**சனவரி 1 (1999)**



**தேனி மாவட்டம், பெரியகுளம் ஒன்றியப் தி.மு.க. பொறுப்பாளராக பணியாற்றியவர்.**

**ஜெயமங்கலம் ஊராட்சி மன்றத் தலைவராகவும் – தேனி கூட்டுறவு விற்பனை சங்க இயக்குநராகவும் – பெரியகுளம் கூட்டுறவு நிலவள வங்கி இயக்குநராகவும் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் மற்றும் கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் பயிற்சி பாசறைக் கூட்டம் கழக சட்டத்துறை செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. தலைமையில் தேனாம்பேட்டை அன்பகத்தில் நடைபெற்றது. இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கழக சட்டத்துறை மாநில நிர்வாகிகள் மற்றும் கழக வழக்கறிஞர் அணி மாவட்ட தலைவர், துணைத் தலைவர், அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



# 2023 - திராவிட மாடல் அரசின் முத்திரை திட்டங்கள் சில...



**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான "திராவிட மாடல் அரசின்" ஜனவரி 2023 முதல் டிசம்பர் 2023 வரையில் ஓராண்டில் சிறப்பான திட்டங்கள் தீட்டப்பட்டு அவை செயல்படுத்தப்பட்டுள்ளன. அத்திட்டங்களில் சிலவற்றை மட்டும் இங்கே தொகுத்துள்ளோம்.**

**ஓராண்டின் சாதனைத் திட்டங்களில் சில இதோ....**

## ஜனவரி

* **செ**ன்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் சென்னை இலக்கியத் திருவிழாவை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்து, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் 100 நூல்களை வெளியிட்டார்.

* தமிழ்நாடு சட்டப் பேரவையில் உரையாற்றிய கவர்னர் ஆர்.என். ரவி அம்பேத்கர், காமராசர், அண்ணா, கலைஞர் ஆகிய தலைவர்களின் பெயர்களை வாசிக்காமல் புறக்கணித்தார். இதனால், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆளுநருக்கு எதிராக ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இதையடுத்து கவர்னர் ஆர்.என்.ரவி, சட்டப் பேரவைக் கூட்டம் முடியும் முன்பே, பாதியிலேயே அவையில் இருந்து வெளியேறினார்.

* சேது சமுத்திரத் திட்டத்தை ஒன்றிய அரசு உடனடியாக நிறைவேற்றிட வலியுறுத்தி சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தனித் தீர்மானம் கொண்டு வந்தார். இந்த தீர்மானம் அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.



சென்னை, வில்லிவாக்கம், அருள்மிகு அகத்தீஸ்வரர் திருக்கோயில் மைதானத்தில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில், 1,250 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்கள் மற்றும் 1,250 கிராமப்புறத் திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள 2 இலட்சம் ரூபாய் வீதம் 2500 திருக்கோயில்களுக்கு 50 கோடி ரூபாய்க்கான வங்கி வரைவோலைகளை வழங்கிடும் அடையாளமாக 18 திருக்கோயில்களைச் சார்ந்த நிர்வாகிகளிடம் வரைவோலைகளை முதல்வர் வழங்கி திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

* **தமிழ்நாடு அரசுப் பணிகளில் சேர தமிழில் தேர்ச்சி கட்டாயம். மசோதா தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றம்.**

* தமிழ்நாடு மற்றும் வெளிநாடு பதிப்பகத்தினரிடையே 365 நூல்களை மொழி பெயர்ப்பு செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் கையெழுத்தானது.

* குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை சார்பில் தமிழ்நாடு பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினர் புத்தொழில் நிதித் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். முதல் கட்டமாக 5 நிறுவனங்களுக்கு ரூ.750 கோடி முதலீடு செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது.

* ஒடிசாவில் தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை ஒடிசா மாநில விளையாட்டுத் துறை அமைச்சக அதிகாரிகளுடன் உலகத்தரம் வாய்ந்த வகையில் விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிப்பது உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு மேம்பாட்டு தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் பரிமாறிக்கொள்ளப்பட்டது.

* 17 ஆண்டுகளுக்குப் பிறகு பழநி மலைக் கோயில் குடமுழுக்கு நடைபெற்றது.

## பிப்ரவரி

* அரசு விரைவுப் பேருந்துகளின் இருப்பிடத்தை அறிய 'சென்னை பஸ் செயலி' அறிமுகம்.



* **திருவள்ளூர் மாவட்டம் பட்டாபிராம் இந்து கல்லூரியில் நடைபெற்ற விழாவில், அரசுப் பள்ளிகளில் 6 முதல் 12ம் வகுப்பு வரை படித்து உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 உதவித் தொகை வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

* நந்தம்பாக்கம் சென்னை வர்த்தக மையத்தில் நடந்த 'கிரெடாய்' கண்காட்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு ரியல் எஸ்டேட் தொலை நோக்கு திட்டம் 2023ஐ வெளியிட்டார்.

* நாடு முழுவதும் உள்ள 5 ஆயிரம் அரசு பள்ளி மாணவர்கள் உருவாக்கிய, 150 செயற்கைகோள்களை சுமந்து சென்ற 'ஹைபிரிட் சவுண்டிங்' ராக்கெட் மாமல்லபுரம் அருகே திருவிடந்தை கடற்கரை பகுதியில் இருந்து வெற்றிகரமாக ஏவப்பட்டது.

* **தமிழ்நாட்டில் 433 அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம் விரிவாக்கம், 44 இடங்களில் புதிய மருத்துவமனைக்கு அடிக்கல், திருநங்கைகளுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது.**

* மின்சார வாகன உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில் மாநில திருத்தப்பட்ட மின் வாகனக் கொள்கையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார். இதன்மூலம் ரூ.50,000 கோடி முதலீட்டை ஈர்த்து 1.5லட்சம்வேலைவாய்ப்பைஉருவாக்கஇலக்குநிர்ணயிக்கப்பட்டுள்ளது.

* ஏற்றமிகு சிறப்புத் திட்டங்கள் எனும் பெயரில் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து நிறைந்த உணவு வழங்குவது, காலை உணவுத் திட்டம் விரிவாக்கம், திருநங்கைகளுக்கு ஓய்வூதியம் அதிகரிப்பு உள்ளிட்ட ஏழு திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

## மார்ச்



* சேப்பாக்கம் எம்.ஏ.சிதம்பரம் ஸ்டேடியத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கலைஞர் மு.கருணாநிதி மாடத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

* **கீழடியில் 2 ஏக்கர் பரப்பளவில் ரூ.18.43 கோடி செலவில் பிரமாண்டமாக கட்டப்பட்ட தொல்பொருள் அருங்காட்சியத்தை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

* தமிழ்நாடு நகர எரிவாயு விநியோக கொள்கை 2023 உள்ளிட்ட, பல்வேறு அரசு திட்டங்கள் மற்றும் கொள்கைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.

* தமிழ்நாடு அரசின் 2023-2024ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டை, நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் சட்டப் பேரவையில் தாக்கல் செய்தார். அதில் பெண்களுக்கு மாதம் ரூ.1000 உதவித் தொகை, கோவை, மதுரையில் மெட்ரோ ரயில் திட்டம் உள்ளிட்ட பல்வேறு முக்கிய அம்சங்கள் இடம் பெற்றன.

* தமிழ்நாடு அரசின் 2023-2024ஆம் ஆண்டுக்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கையை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார். பட்ஜெட்டில் விவசாயிகளுக்கு கூட்டுறவுத் துறை மூலம் ரூ.14,000 கோடி பயிர்க் கடன் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

* தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் ஒன்றிய அமைச்சர் பியூஷ் கோயல் ஆகியோர் முன்னிலையில் விருதுநகர் மாவட்டத்தில், இந்தியாவில் முதலாவதாக பிரதமரின் ஒருங்கிணைந்த ஜவுளி மற்றும் ஆடைப் பூங்கா தொடக்க விழாவில் 11 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

* தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியால், திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதா மீண்டும் சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் கொண்டு வரப்பட்டு, அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் ஆதரவுடன் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

* மயிலாடுதுறையில் அமைக்கப்பட்ட மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

* **தமிழ்நாடு மகளிர் காவல்துறையின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு 'அவள்' திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இதில் பெண் காவலர்களின் சூழ்நிலைக்கேற்ப விடுப்பு வழங்குவது உள்ளிட்ட 9 திட்டங்களை அறிவித்தார்.**

* **தமிழ்நாட்டில் ஒரு கோடி மகளிருக்கு ரூ.1,000 மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும் என சட்டப் பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.**

## ஏப்ரல்

* கேரள மாநிலம், கோட்டயம், வைக்கத்தில் நடந்த வைக்கம் சத்தியாகிரக போராட்டத்தின் நூற்றாண்டு விழாவில், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வைக்கம் சத்தியாகிரக போராட்ட நூற்றாண்டு விழாவிற்கான இலச்சினையை வெளியிட்டார்.

* தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை சார்பில் கீழடி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளான கொந்தகை, அகரம், திருவண்ணாமலை மாவட்டம் கீழ்நமண்டி ஆகிய இடங்களில் அகழாய்வு பணிகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

* கடற்கரை ரோந்து மற்றும் மீட்பு இழுவை வாகனங்களின் சேவையை தொடங்கி வைத்து, ரூ.20 கோடியில் 12 புதிய தீயணைப்பு நிலையங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

* தமிழ்நாடு சட்டப் பேரவையில் இரண்டாவது முறையாக நிறைவேற்றப்பட்ட ஆன்லைன் சூதாட்ட தடை சட்ட மசோதா அரசிதழில் வெளியிடப்பட்டு உடனடியாக அமலுக்கு வந்தது. அதன்படி, தடையை மீறினால் 5 ஆண்டு சிறை தண்டனை, ரூ.20 லட்சம் அபராதம் வரை விதிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

* முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் கோரிக்கையை ஏற்று சி.ஆர்.பி.எப். உள்பட அனைத்து ஆயுதப் படை காவலர் தேர்வையும் ஆங்கிலம், இந்தி மட்டுமல்லாமல் தமிழ் உள்பட 13 மாநில மொழிகளிலும் நடத்துவதற்கு ஒன்றிய உள்துறை அமைச்சகம் ஒப்புதல் அளித்தது.

## மே

* நெல்லையில் "பொருநை" அருங்காட்சியகத்திற்கான கட்டுமானப் பணிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திருவாரூர் மாவட்டம், காட்டூரில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் கோட்டத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வின்போது, பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவ், பீகார் மாநில நீர்வளத்துறை மற்றும் செய்தி மக்கள் தொடர்புத் துறை அமைச்சர் சஞ்சய் குமார் ஜா, தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், அமைச்சர் எ.வ.வேலு, திருமதி.செல்வி செல்வம், திருமதி.சாந்தா ஸ்டாலின் மற்றும் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தயாளு அம்மாள் அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் மருத்துவர் மோகன் காமேஸ்வரன், அறங்காவலர் சம்பத்குமார், பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர். (20.6.2023)

* தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராம ஊராட்சிகள் கணினி மயமாக்கப்பட்டதை தொடர்ந்து, வீட்டு வரி, சொத்துவரிகளை ஆன்லைனில்



செலுத்தும் வசதி அமலானது.

* அரசுப் பேருந்துகளில் 5 வயது வரையிலான குழந்தைகளுக்கு பயணச் சீட்டு கட்டணம் கிடையாது என தமிழ்நாடு அரசு அறிவித்தது.

* தமிழ்நாட்டில் நவீன வகை கார்களை தயாரித்தல், மின்சார வாகனத்துக்கான மின்கலன் தொகுப்பு உருவாக்கம் ஆகியவற்றுக்காக ஹுண்டாய் நிறுவனம் ரூ.20,000 கோடி முதலீடு செய்கிறது. சென்னையில் முதல்வர் ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், தமிழ்நாடு அரசுக்கும், அந்த நிறுவனத்துக்கும் இடையே கையொப்பமானது.

## ஜூன்



* கலைஞரின் நூற்றாண்டு விழாவையொட்டி, கலைஞர் நூற்றாண்டு இலச்சினையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.

* தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து, சென்னை அடுத்த ஒரகடத்தில் நிறுவியுள்ள தொழில் 4.0 தொழில்நுட்ப மையங்களை திறந்து வைத்தார்.

* **சென்னை, கிண்டி கிங் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில், 1,000 படுக்கைகளுடன் 240.54 கோடி செலவில் உலகத் தரத்தில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையை முதல்வர் மு.க.ஸ்டாலின், அவர்கள் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுடன் இணைந்து திறந்து வைத்தார்.**

* சென்னை நந்தம்பாக்கத்தில் ரூ.116 கோடியில் நிதி நுட்ப நகரம் அமைப்பதற்கும், முதற்கட்டமாக ரூ.254 கோடியில் சர்வதேச தரத்திலான நிதிநுட்ப கோபுரம் கட்டுவதற்கும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

* **திருவாரூர் மாவட்டம், காட்டூரில் புதிதாக கட்டப்பட்ட கலைஞர் கோட்டம் மற்றும் கலைஞரின் திருவுருவச் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் அவரது சகோதரி செல்வி செல்வம் ஆகியோர் திறந்து வைத்தனர்.**

* சென்னையில் நடந்த பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் நாள் விழாவில், கடலூர் மாவட்டம், பண்ருட்டி, காடம்புலியூரில் அமைக்கப்பட்டுள்ள முந்திரி பதப்படுத்தும் குறுந்தொழில் குழுமத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

* மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு ரூ.70,000 கடனுதவியை 'வாழ்ந்து காட்டுவோம்' திட்டத்தின் மூலம் வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

* தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் ரூ.125 கோடி மதிப்பில் கட்டப்பட்ட 500 நகர்ப்புற சுகாதாரம் மற்றும் ஆரோக்கிய மையங்களை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். ஒவ்வொரு மையத்திலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர் மற்றும் ஒரு மருத்துவமனைப் பணியாளர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ஜூலை

* மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர், வீராங்கனைகள் திறன் மேம்பாட்டுக்காக 6 மாவட்டங்களில் முதற்கட்டமாக பயிற்சி அரங்கங்கள் அமைக்கப்படும் என்று இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

* **மதுரையில் ரூ.215 கோடி மதிப்பில் சர்வதேச தரத்தில் பிரமாண்டமான முறையில் கட்டப்பட்ட கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

* சட்டம் பயிலும் மாணவர்களுக்கு வழிகாட்டும் வகையில் 'சத்திய தேவ் லா அகாடமி'யை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

* ராணிப்பேட்டை சிப்காட் நிலை 3இல் திரவ மருத்துவ மற்றும் தொழில் ஆக்சிஜன், திரவ நைட்ரஜன், திரவ ஆர்கான் உற்பத்தியை மேற்கொள்ளுவதற்காக அதிநவீன ஒருங்கிணைப்பு ஆலை அமைக்கும் பணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

* **தமிழ்நாட்டில் முதியோர் உதவித் தொகை ரூ.1,200 உயர்த்தி வழங்க முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.**

* எழும்பூர் மேயர் ராதாகிருஷ்ணன் அரங்கத்தில் ஹாக்கி விளையாட்டரங்கம், ஒலிம்பிக் தரத்திலான புதிய செயற்கை இழை மைதானம் மற்றும் கலைஞர் நூற்றாண்டு பார்வையாளர் மாடம் ஆகியவற்றை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

* **மகளிருக்கு மாதந்தோறும் ரூ.1,000 வழங்கும் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் விண்ணப்பப் பதிவு செய்யும் பணியை தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தருமபுரி மாவட்டம் தொப்பூரில் தொடங்கி வைத்தார்.**

## ஆகஸ்ட்

* **கிழக்குக் கடற்கரை சாலை பேரூரில், ரூ.4,276 கோடியே 44 லட்சம் மதிப்பீட்டில் கடல்நீரை குடிநீராக்கும் நிலையம் அமைக்கும் பணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**



* **நாட்டிலேயே முதல் முறையாக தமிழ்நாடு முழுவதும் 31,000 அரசுப் பள்ளிகளில் காலை உணவு திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

* பிரபல பின்னணி பாடகர் மறைந்த டி.எம்.சௌந்தரராஜன் அவர்களின் முழு உருவச் சிலையை மதுரையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

* அமெரிக்காவை தலைமையிடமாக கொண்ட சரக்கு போக்குவரத்து மற்றும் விநியோக சங்கிலி மேலாண்மையில் யு.பி.எஸ். நிறுவனம் - சென்னைப் போரூரில் தொழில்நுட்ப மையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

* சென்னையில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு நினைவு பன்னாட்டு மாரத்தான் - 2023 போட்டியில் 50,629 ஆண்கள், 21,514 பெண்கள், 1,063 மூன்றாம் பாலினத்தவர் பங்கேற்றனர். மொத்தம் 73,206 பேர் கலந்துகொண்ட இப்போட்டி கின்னஸ் சாதனை படைத்ததாக அறிவிக்கப்பட்டது.

* **நடப்பாண்டில் விவசாயிகளுக்கு 50 ஆயிரம் இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

* **தமிழ்நாட்டில் 31,000 பள்ளிகளில் பயிலும் 17 லட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தப்பட்ட காலை உணவுத் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திருக்குவளையில் தொடங்கி வைத்தார்.**

## செப்டம்பர்

* தமிழ்நாட்டில் தொழிற்சாலைகளுக்கு ஆண்டுக்கு 4 முறை மின் கட்டணச்சலுகை வழங்கப்படும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு.

* கோயில்களில் அர்ச்சகர்களை நியமிக்கும் விவகாரத்தில் தமிழ்நாட்டில் தற்போது இருக்கும் நிலையே தொடரும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவு.

* தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்ச்சி பெற்ற தேர்வர்களுக்கு அரசுப் பணி நியமன ஆணையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.




* **குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை' திட்ட தொடக்க விழா காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி மைதானத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. விழாவில், திட்டத்தைத் தொடங்கி வைக்கும் வகையில் 13 பெண்களுக்கு வங்கி பற்று அட்டைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். இத்திட்டத்தின் மூலம் மாதந்தோறும் ரூ.1,000 வீதம் ஒரு கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வழங்கப்பட்டு வருகிறது.**

* இறக்கும் முன் உறுப்பு தானம் செய்வோரின் இறுதிச் சடங்குகள் இனி அரசு மரியாதையுடன் மேற்கொள்ளப்படும் என தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

## அக்டோபர்

* சென்னையில் சாதனை படைத்த தமிழ்நாட்டு விண்வெளி விஞ்ஞானிகள் சிவன், மயில்சாமி அண்ணாதுரை, நாராயணன், ராஜரர், சங்கரன், ஆசீர் பாக்கியராஜ், வனிதா, நிகார் ஷாஜி, வீரமுத்துவேல் ஆகியோருக்கு தலா ரூ.25 லட்சமும், பாராட்டு சான்றிதழும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

* சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாமின் திருவுருவச் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

* அடுக்குமாடி குடியிருப்புகளில் பொது வசதிகளுக்கான மின் இணைப்பு கட்டணம் யூனிட்டுக்கு ரூ.8ல் இருந்து ரூ.5.50 குறைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

## நவம்பர்



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மதுரை புதுநத்தம் சாலையில், 2, 13, 338 சதுர அடி பரப்பளவில், தரைத்தளம் மற்றும் 6 தளங்களுடன் கட்டப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், எச்.சி.எல். குழுமத்தின் நிறுவனர் ஷிவ் நாடார், தலைவர் திருமதி ரோஷினி நாடார், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, அமைச்சர் பெருமக்கள், மாண்பமை நீதியரசர்கள், மதுரை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தர மோகன், பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி எம்.எஸ். சங்கீதா, , மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். (15.7.2023)

* சாலைகளில் ஏற்படும் இடர்ப்பாடுகள் குறித்து பொதுமக்கள் புகார் தெரிவிப்பதற்காக 'நம்ம சாலை' என்ற புதிய செயலியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

* தமிழ்நாடு விளையாட்டு அறிவியல் சர்வதேச கருத்தரங்கத்தை (டாஸ்கான் 2023) அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் தொடங்கி வைத்தார்.

* **கோயில்களில் அனைத்துச் சாதியினரையும் அர்ச்சகர்களாக நியமிக்கும் விவகாரத்தில் தமிழ்நாடு அரசு பிறப்பித்துள்ள அரசாணை குறித்து எந்தவித கருத்து கூறவோ அல்லது தற்போது அதற்கு தடை விதிக்கவோ முடியாது என உச்ச நீதிமன்றம் தெரிவித்தது.**

* தமிழ்நாடு சட்டப் பேரவையில் ஆளுநர் திருப்பி அனுப்பிய பல்கலைக்கழகங்கள் தொடர்பான 10 மசோதாக்கள் மீண்டும் நிறைவேற்றப்பட்டன.

* **'உங்களைத் தேடி, உங்கள் ஊரில்' திட்டத்தின்படி அனைத்து மாவட்ட கலெக்டர்களும், மாதத்தில் ஒரு நாள் முழுவதும் கிராமங்களில் தங்கி மக்களின் குறைகளுக்கு உடனடி தீர்வு காண வேண்டும் என்று தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவு.**

* சென்னையில் ஓ.எம்.ஆர். சாலையில் இந்திரா நகர் சந்திப்பில் ரூ.18.15 கோடியில் 'U' வடிவ மேம்பாலத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

* **சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் சிலையை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.**

## டிசம்பர்

* மிக்ஜாம் புயல் பாதிப்பு மற்றும் தென் மாவட்ட வெள்ள சேதங்களுக்கு நிவாரண நிதியை வழங்க கோரி டெல்லியில் பிரதமர் மோடியை சந்தித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோரிக்கை மனு அளித்தார்.

* மிக்ஜாம் புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சென்னை, செங்கல்



சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தில் முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்கள் திருவுருவச் சிலை திறப்பு (27.11.2023)

பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட மக்களுக்கு ரூபாய் 6000 நிவாரண நிதி வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

* கோவையில் "மக்களுடன் முதல்வர்" திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

* நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி, கடும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நிதி முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால், ரூபாய் 6000, ரூபாய் ஆயிரம் என்று அறிவிக்கப்பட்டு அம்மக்களுக்கு நிவாரண நிதி வழங்கப்பட்டது.

* வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழா - சிறப்பு மலர் வெளியீடு, முதல்வர் மு.க.ஸ்டாலின், கேரள முதல்வர் பினராயி விஜயன், திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி ஆகியோர் பங்கேற்பு.

* மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.1000 கோடியில் நிவாரணத் தொகுப்பு திட்டம் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்தார்.

* **கிளாம்பாக்கத்தில் ரூ.393.74 கோடி மதிப்பீட்டில் இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவில் 'கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்' முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.**



கிளாம்பாக்கத்தில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து நிலையம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார். (30.12.2023)




மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் 6,783 மாவண, மாணவிகளுக்கு ரூபாய் 3 கோடியே 26 லட்சம் மதிப்பிலான இலவச சைக்கிள்களை சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் மாணவ, மாணவிகளுக்கு வழங்கினார். உடன் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.பி.மகாபாரதி, மாவட்ட கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், மாவட்ட ஊராட்சி தலைவர் உமாமகேஸ்வரிசங்கர், நகரக் கழகச் செயலாளர்கள் ம.சுப்பராயன், குண்டாமணி (எ) என்.செல்வராஜ், சீர்காழி நகர்மன்ற தலைவர் ஆர்.துர்காபரமமேஸ்வரி மற்றும் பலர் உள்ளனர்.



நாகை மாவட்டத்தில் உள்ள 51 மேல் நிலைப் பள்ளியில் படிக்கும் 11ம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்கு 5,376 இலவச சைக்கிள்களை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கினார். உடன் நாகை மாவட்டக்கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன், மாவட்ட வருவாய் அலுவலர் பேபி, நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.முருகையன், தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளர் மகா.குமார், மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் உமாமகேஸ்வரிசங்கர் மற்றும் பலர் உள்ளனர்.

# பெரம்பலூர் - வேப்பூரில் ரூ.4.38 கோடி மதிப்பிலான புதிய திட்டப்பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், ஜன.1-

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் ரூ.4.38 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வுகளில் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது: மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து ஏழை எளிய அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

அதனடிப்படையில் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் பல மக்கள் நலத்திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் பல்வேறு இடங்களில் ரூ.51.01 லட்சம் மதிப்பிலான 12 வளர்ச்சித் திட்டப் பணிகளும், ஜல் ஜீவன் மிசன் திட்டத்தின் கீழ் பல்வேறு இடங்களில் ரூ.1.23 கோடி மதிப்பிலான 05 வளர்ச்சித் திட்டப் பணிகளும், பிரதான் மந்திரி ஆதர்ஷ் கிராம் யோஜனா திட்டத்தின் கீழ் பல்வேறு இடங்களில் ரூ.1.25 கோடி மதிப்பிலான 20 வளர்ச்சித் திட்டப் பணிகளும்

என பல்வேறு திட்டங்களின் கீழ் சுமார் ரூ.4.02 கோடி மதிப்பிலான 40 வளர்ச்சித்திட்டப் பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

கிழுமத்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையயினை நிறவேற்றும் வகையில், ரூ.1.20 கோடி மதிப்பில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் கட்டுவதற்கான பணிகளும் இன்று தொடங்கிவைக்கப்பட்டுள்ளது.

இந்த பணிகள் அனைத்தும் விரைவில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் பணிகளை துரிதமாக மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல சிறுமத்தூர் ஊராட்சிக்குட்பட்ட பொன்னகரத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.15.27 லட்சம் மதிப்பீட்டில் பால் உற்பத்தியாளர்கள் சங்க கட்டிடத்தினையும், முருக்கன்குடியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.17.43 லட்சம் மதிப்பீட்டில் பால் உற்பத்தியாளர்கள் சங்க கட்டிடத்தினையும், திருமாந்துறையில் ரூ.6 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தினை பொதுமக்கின் பயன்பாட்டிற்கும் என மொத்தம் ரூ.36 லட்சம் மதிப்பீட்டில் 03 பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைத்துள்ளோம். பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை, அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசின் திட்டங்களை பொதுமக்கள் முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அ.லலிதா, வேப்பூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் தி.மதியழகன்,

வேப்பூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் பிரபா செல்லப்பிள்ளை, வேப்பூர் வட்டார வளர்ச்சி அலுவலர் செல்வகுமார், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் டாக்டர் அ.கருணாநிதி, குன்னம் வட்டாட்சியர் கோவிந்தம்மாள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.சார்பில்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள்

## ஜீன் 2023 முதல் டிசம்பர் 2023வரை 70 நிகழ்ச்சிகள் நிறைவு - 2024 ஜனவரி மாத நிகழ்வுகள் 10



அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவிப்பு!

| நாள் | நிகழ்ச்சிகள் | நிகழ்ச்சி ஏற்பாடு | தலைமை | சிறப்பு அழைப்பாளர்கள் |
|---|---|---|---|---|
| 07/01/24 06.00PM | முத்தமிழ் அறிஞர் கலைஞர் புகழ் பரப்பும் பொது கூட்டம் | பொன்மலை பகுதி கழகம் | இ.எம்.தர்மராஜ் பகுதி செயலாளர் | அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் |
| 08/01/24 05.00PM | மகளிர் அணி சார்பில் கலைஞரும் மகளிர் மேம்பாடும் என்னும் தலைப்பில் பெண் தலைவர்களின், பயிற்சி பயிலரங்கம் மற்றும் கருத்தரங்கம் | மாவட்ட, மாநகர மகளிர் அணி | வி.பொற்கொடி மாவட்ட அமைப்பாளர் பா.சிந்துஜா மாநகர அமைப்பாளர் | ஜெ.ஹெலன் டேவிட்சன் MP மாநில மகளிர் அணி செயலாளர் கருத்தரங்கத்தில் உரையாற்றுபவர்கள் அமைச்சர் கீதா ஜீவன் தூத்துக்குடி வடக்கு மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி துணை பொதுச்செயலாளர் திராவிட கழகம் |
| 13/01/24 05.00PM | கலைஞர் நூற்றாண்டு சிலம்பம் போட்டி மற்றும் பொங்கல்விழா | மாவட்ட, மாநகர விவசாய அணி | கோ.ரமேஷ் மாவட்ட அமைப்பாளர் பி.எம்.கே.குறிஞ்சி மன்னன் மாநகர அமைப்பாளர் | ஏ.கே.எஸ்.விஜயன் மாநில விவசாய அணி செயலாளர் சிறப்புரை இயற்கைவழி மேலாண்மை விவசாயி வி.எம்.பார்த்தசாரதி |
| 17/01/24 08.00AM | முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் பொங்கல் பண்டிகை சிறப்பு போட்டி கிடா முட்டு சண்டை | மாவட்ட துணை செயலாளர் | அ.த.த.செங்குட்டுவன் | சிறப்பு விருந்தினர் ஆர்.எஸ்.பாரதி தி.மு.க.அமைப்பு செயலாளர் |
| 19/01/24 09.00AM | தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா திருச்சி தெற்கு மாவட்டத்தில் 100வது கொடிக்கம்பத்தில் கொடியேற்றுதல் மற்றும் 72 வட்ட கழகங்களில் 100 கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் விழா | திருச்சி மாநகர கழகம் | மு.முதிவாணன் மாநகர கழக செயலாளர் | அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் விருதுநகர் தெற்கு மாவட்ட செயலாளர் |
| 25/01/24 06.00PM | தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா மற்றும் மொழிப்போர் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம் | கலைஞர் நகர் பகுதி கழகம் | ஜி.மணிவேல் பகுதி செயலாளர் | அமைச்சர் எ.வ.வேலு மாவட்ட கழக செயலாளர் திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. |
| 26/01/24 04.00PM | தலைவர் கலைஞர் திருவுருவச்சிலை திறப்பு விழா திருச்சி கிழக்கு தொகுதி | திருச்சி தெற்கு மாவட்ட கழகம் | மாவட்ட கழக செயலாளர் | கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் |
| 27/01/24 09.00AM | திருச்சி மணப்பாறையில் கலைஞர் நூற்றாண்டு முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் குறித்த புகைப்பட கண்காட்சி, கால்பந்து போட்டி நடத்தி வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி பின்னர் பகுதி, ஒன்றிய, நகர, பேரூரில் தலா 100 மரக்கன்றுகள் நடுதல் | மாவட்ட, மாநகர சுற்றுசூழல் அணி | பி.கிருஷ்ணகோபால் மாவட்ட அமைப்பாளர் என்.ரமேஷ் மாநகர அமைப்பாளர் | கார்த்திகேய சிவசேனாதிபதி மாநில சுற்றுச் சூழல் அணி செயலாளர் சிறப்பு விருந்தினர் ஈரோடு மகேஷ் |
| 27/01/24 05.00PM | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியத்தில் 11 ஊராட்சிகளிலும் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா கல்வெட்டு திறந்து கழக கொடியேற்றும் விழா | திருவெறும்பூர் வடக்கு ஒன்றிய கழகம் | கே.எஸ்.எம்.கருணாநிதி ஒன்றிய செயலாளர் | மாவட்ட கழக செயலாளர் |
| 28/01/24 09.30AM | கூடைப்பந்து போட்டி நடத்தி அதில் வெற்றி பெற்றவர்களுக்கு தலைவர் கலைஞர் நினைவு கோப்பை வழங்கும் விழா | கூத்தைப்பார் பேரூர் கழகம் | எம்.ஆர்.டி.பி.கே.தங்கவேல் பேரூர் கழக செயலாளர் | சிறப்பு விருந்தினர் தாயகம் கவி துணை அமைப்பு செயலாளர் |

**அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி**
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் மாநகர பேருந்துகள் இன்று முதல் செயல்படும்!

# 6 போக்குவரத்துக் கழகங்கள் பொங்கலுக்குப் பிறகு இயக்கப்படும்!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேட்டி!

சென்னை, ஜன. 1 -

கிளாம்பாக்கத்தில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனைய திறப்பு விழாவிற்கு பிறகு போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பத்திரிகை யாளர்களை சந்தித்து தெரிவித்ததாவது:-

கிளாம்பாக்கத்தில் அமைந்துள்ள "கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்" இன்றைக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது.

மிகப்பெரிய பேருந்து முனையமாக இந்த பேருந்து முனையம் அனைத்து வசதிகளுடன் சி.எம்.டி.ஏ.வால் அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே, சென்னை, கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து இயங்கிய பேருந்துகள் இனி எந்தந்த வகையில் இங்கிருந்து இயங்கும் என்பதை இந்த நேரத்திலே உங்களிடத்திலே எடுத்துக்கூற விரும்புகிறேன்.

அரசு விரைவு போக்குவரத்து கழகத்தை பொறுத்தவரை இன்றைக்கு கோயம்பேட்டிலிருந்து இயங்குகின்ற பேருந்துகள், கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திற்கு வந்து தெற்கு பகுதிக்கு செல்லும். பெங்களூர், கிழக்கு கடற்கரை சாலைகளுக்கு செல்லும் பேருந்துகள் கோயம்பேட்டிலிருந்து இயங்கும்.

அதேபோல தென் தமிழ்நாட்டிலிருந்து வருகின்ற பேருந்துகள் அத்தனையும், அரசு விரைவு போக்குவரத்து கழகத்தின் முதல் பேருந்து இன்று காலை 4 மணி அளவிலே கோயம்பேட்டிற்கு வரும். அதற்குப் பிறகு வருகின்ற அத்தனை பேருந்துகளும் கிளா ம்பாக்கம் பேருந்து முனையத்திற்குதான் வரும். கோயம்பேட்டிற்கு செல்லாது. எனவே, அரசு விரைவு போக்குவரத்து கழகத்தை பொறுத்தவரை முழுமையாக இன்றிலிருந்து கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனை யத்திலிருந்து இயங்கும்.

சாதாரண நாட்களில் 300 புறப்பாடுகளும், வார இறுதி நாட்களில் 360 புறப்பாடுகள் கொண்ட அரசு விரைவு போக்குவரத்து கழகத்தினுடைய பேருந்துகள் அத்தனையும் கிளாம்பாக்கத்திலிருந்து இயங்கும்.

அதேபோல, சென்னை மாநகர போக்குவரத்துக் கழகத்தின் சார்பாக இயக்கப்படும் பேருந்துகள் டிசம்பர் 31-ஆம் தேதி காலையிலிருந்து சென்னையின் எல்லா பகுதிகளுக்கும் கிளாம்பாக்கத்திலிருந்து இயக்கப்படும். ஏற்கனவே உள்ள வழித்தடத்தில் இயங்கிக்கொண்டு இருக்கிற பேருந்துகளை தாண்டி, கூடுதலாகவும் பேருந்துகள் இயக்கப்பட இருக்கிறது.

மாநகர போக்குவரத்துக் கழகத்தை பொறுத்தவரை கோயம்பேடு பேருந்து நிலையத்திற்கு இங்கிருந்து (கிளாம்பாக்கம்) 270 நடைகள் இயக்கப்படும். ஐந்து நிமிடத்திற்கு ஒரு பேருந்து



இங்கிருந்து கோயம்பேடு பேருந்து நிலையத்திற்கு செல்லும்.

அதேபோல தாம்பரம் செல்கின்ற பேருந்துகள் 2 நிமிடத்திற்கு ஒரு பேருந்து கிளாம்பாக்கத்திலிருந்து தாம்பரத்திற்கு புறப்படும். இங்கிருந்து (கிளாம்பாக்கம்) கிண்டிக்கு செல்லும் மாநகர போக்குவரத்து பேருந்துகள் மூன்று நிமிடத்திற்கு ஒரு பேருந்து என்று இயக்கப்படும். ஏற்கனவே இந்த வழித்தடத்தில் 2386 நடை பேருந்துகள் இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்பொழுது கூடுதலாக 1691 நடை பேருந்துகள் இயக்கப்பட இருக்கிறது. எனவே, மொத்தம் 4077 நடைகள் கிளாம்பாக்கத்தின் இந்த வழித்தடத்திலே இயக்கப்படும்.

அதேபோல, இந்த அரசு விரைவு போக்குவரத்துக் கழகம் அல்லாத மற்ற ஆறு போக்குவரத்து கழகங்கள் விழுப்புரம், கும்பகோணம், சேலம், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய ஆறு அரசு போக்குவரத்து கழகங்களுடைய பேருந்துகள் கோயம்பேட்டிலிருந்து கிளாம்பாக்கம் வந்து அந்தந்த வழித்தடத்தில் இயங்கும். பொங்கல் வரை இந்த நிலை நீடிக்கும்.

பொங்கலுக்கு பிறகு அந்த அத்தனை பேருந்துகளும் கிளாம்பாக்கத்திலிருந்து தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளுக்கு இயக்கப்படும். 1,140 புறப்பாடுகள் பொங்கல் வரை கோயம்பேட்டிலிருந்து கிளாம்பா க்கம் வழியாக இயக்கப்படும்.

அதேபோல ஆம்னி பேருந்துகள் இன்றைக்கு கிளாம்பாக்கம், கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்திலிருந்து தங்களுடைய செயல்பாட்டினை தொடங்கிவிட்டார்கள். ஏற்கனவே அவர்களுக்கு டிக்கெட் புக்கிங் ஆகியுள்ளதன் காரணத்தால், பொங்கல் வரை சென்னை நகரத்திலிருந்து இயக்கப்படும். பொங்கலுக்கு பிறகு முழுமையாக கிளாம்பாக்கத்திலிருந்து அந்த ஆம்னி பேருந்துகள் இயக்கப்படும்.

எனவே, அரசு விரைவு போக்குவரத்து கழகத்தை பொறுத்தவரை நாளையிலிருந்தே முழுமையான செயல்பாடு இங்கிருந்து தொடங்கும். மாநகர போக்குவரத்து கழகம் நாளை காலையிலிருந்து இங்கிருந்து சென்னை மாநகரத்தின் அனைத்து பகுதிகளுக்கும் பேருந்துகள் இயக்கப்படும். அரசு போக்குவரத்து கழகத்தின் மற்ற ஆறு போக்குவரத்து கழகங்கள் பொங்கல் வரை கிளாம்பாக்கம் வழியாக செல்பவை, பொங்கலுக்கு பிறகு முழுமையாக கிளாம்பாக்கத்திலிருந்து இயக்கப்படும். அதேபோல ஆம்னி பேருந்துகள் கிளாம்பாக்கத்தி லிருந்து முழுமையாக இயக்கப்படும்.

இவ்வாறு அவர் பேட்டியளித்தார்.

## எழும்பூரில் ரூ.3.62 கோடி மதிப்பீட்டில் திட்டப் பணிகள்!

சென்னை, ஜன. 1 –

எழும்பூர் தொகுதிக்குட்பட்ட கேசவபிள்ளை பூங்கா (K.P.Park) நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அடுக்குமாடிக் குடியிருப்பு வளாகத்தில் நடந்த நிகழ்வில், கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி மரக்கன்றுகளை நட்டு, பின்பு அக்குடியிருப்பு வளாகத்தில், அயோத்திதாஸ் பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்ட நிதியின் கீழ் 1.5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ்நிலை நீர் தேக்கத் தொட்டி, சிறு கடைகள், சுற்றுச்சுவர், நடைபாதை ஆகியவை அமைத்தல் மற்றும் பழுதடைந்த குடிநீர்க் குழாய்களைச் சரி செய்தல் உள்ளிட்ட 3.62 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான மேம்பாட்டுப் பணிகளுக்கு, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் மற்றும் சென்னை மாநகராட்சி அதிகாரிகள் முன்னிலையில் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்வில் மாவட்டப் பிரதிநிதியும் முன்னாள் வட்டச் செயலாளருமான கமலக்கண்ணன், மாவட்டப் பிரதிநிதி மா.காந்தி, பகுதிப் பிரதிநிதி ஏ.யு.மணிவண்ணன், முன்னாள் வட்டச் செயலாளர் புருஷோத்தமன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், முன்னாள் பகுதிப் பொருளாளர் கலையரசன், அவைத் தலைவர் மருதன், வி.கே.ஆர்.விக்னேஷ், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் சிலம்பரசன், 108 (அ) வட்ட இளைஞரணி அமைப்பாளர் சதிஷ்குமார், எழும்பூர் சி.ரமேஷ், பன்னீர் செல்வம், கி.புஷ்பராஜ், அசினா பேகம், பாலாஜி அன்புமணி, கோமகன், தன பிரபா, கலா, கவிதா, தர்மதுரை, அமரசேகர் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், முன்னோடிகளும் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## க. இளமதி

**சனவரி 1 (1975)**



இளமைப் பருவத்திலேயே, கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

1963ஆம் ஆண்டு சென்னை கடற்கரை சாலையில், கழகத்தின் சார்பில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டு, கைது செய்யப்பட்டு ஆறு மாத கடுங்காவல் தண்டனை பெற்று சிறைவாசம் அனுபவித்தவர்.

ஒருங்கிணைந்த சென்னை மாவட்டத்தில் 88வது வட்டச் செயலாளராக 1964ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து பத்தாண்டுகள் பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (30.12.2023) முகாம் அலுவலகத்தில், DMart நிறுவனத்தின் முதன்மை செயல்பாட்டு அலுவலர் பாஸ்கரன் சந்தித்து, மிக்ஜாம் புயல் பேரிடர் நிவாரணப் பணிகளுக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 3 கோடி ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். உடன் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, DMart நிறுவனத்தின் பொது மேலாளர்கள் குமாரவேல், ஜிக்னேஷ் ஷா, துணை பொது மேலாளர் ராஜு, ஆலோசகர் செந்தில் ஆகியோர் உள்ளனர்.

திருநெல்வேலி - தூத்துக்குடி மாவட்ட மக்கள் அபராதமின்றி

# மின் கட்டணம் செலுத்த கால அவகாசம் நீட்டிப்பு!

## அமைச்சர் தங்கம் தென்னரசு அறிவிப்பு!

சென்னை, ஜன. 1-

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களுக்கு மின்கட்டணத்தை அபராதத்தொகை இல்லாமல் செலுத்த 02.01.2024 வரை வழங்கப்பட்ட கால அவகாசம் தற்போது கூடுதலாக 01.02.2024 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக நிதி மற்றும்மனிதவளமேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம்தென்னரசுதெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, நிதிமற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:



கனமழையின் காரணமாகதிருநெல்வேலிமற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள அதீத பாதிப்பினை கருத்தில் கொண்டு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருநெல்வேலி மற்றும்தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள மின்நுகர்வோர்கள் தங்களது மின் கட்டணத்தை அபராதத் தொகை இல்லாமல் செலுத்த கீழ்க்கண்டவாறு கூடுதல் கால நீட்டிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள மின் உபயோகிப்பாளர்களின்மின்கட்டணம் செலுத்தும் கடைசி நாள் 18.12.2023 முதல் 02.01.2024 வரை இருந்த நிலையில், அபராதத் தொகை இல்லாமல் 01.02.2024 அன்று வரை மின்உபயோகிப்பாளர்கள் மின்கட்டணம் செலுத்த கூடுதல்காலநீட்டிப்புவழங்கப்படுகிறது.

இந்தகாலநீட்டிப்புவீடு, வணிகபயன்பாடு, தொழிற்சாலைகள், சிறு, குறுமற்றும் நடுத்தரத் தொழில் மற்றும் பிற மின்நுகர்வோர்கள் அனைவருக்கும் பொருந்தும்.

இவ்வாறு அமைச்சர் தங்கம்தென்னரசுதெரிவித்துள்ளார்.



சென்னை வில்லிவாக்கத்தைச் சேர்ந்த முகம்மது இத்ரீஸ். எழும்பூரில் சாலையோர வியாபாரியாக பொம்மை உள்ளிட்ட பொருட்களை விற்பனை செய்து வருபவர். மனைவி மற்றும் மூன்று மகன்களுடன் வாடகை வீட்டில் வசித்து வரும் அவர், சொற்ப வருமானத்தைக் கொண்டு வாடகை செலுத்த சிரமமாக இருப்பதாகவும் அரசு சார்பில் வீடு ஒன்றை ஒதுக்கீடு செய்து தருமாறும் கோரிக்கை வைத்ததையடுத்து பெரம்பூர் ரமணா நகரில் உள்ள தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்பில் வீடு ஒன்றினை வழங்குவதற்கான ஒதுக்கீட்டு ஆணையையும் வீட்டை பெறுவதற்கான முன் தொகையையும் இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கி வாழ்த்தினார். உடன் அமைச்சர் பி.கே.சேகர் பாபு உள்ளார்.



சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் டிசம்பர் முதல் வாரத்தில் பெய்த கனமழையால், பல்வேறு இடங்களில் வெள்ள பாதிப்புகளை ஏற்படுத்தியது. அத்தகையப் பேரிடர் நேரத்தில், மக்களை காத்திட அரசுடன் கைகோர்த்து களத்தில் இறங்கி மீட்பு நிவாரணப் பணிகளை மேற்கொண்ட தன்னார்வலர்களை நேற்று முன்தினம் நேரில் சந்தித்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பாராட்டி ஊக்கப்படுத்தினார்.



# திராவிட மாடல் அரசு 49

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி.**






## வைக்கம் போற்றுதும்!




**வை**க்கம் போராட்டத்தின் நூற்றாண்டு குறித்த சிறப்புக் கட்டுரைகளை, பல்வேறு அறிஞர் பெருமக்களிடமிருந்து பெற்று, அவை ‘வைக்கம் போராட்டம் நூற்றாண்டு மலர்’ என்ற சிறப்பு மலராகத் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. இதில் தமிழ், மலையாளம் மற்றும் ஆங்கிலம் என மூன்று மொழிகளிலிருந்தும் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன.

**தி**ராவிட இயக்க வரலாற்றில் 2023 ஆம் ஆண்டு மிகவும் பொருள் பொதிந்த ஆண்டு. ‘முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு’ கடைபிடிக்கப்படும் நேரத்தில், அதற்கு மகுடம் வைத்தாற் போல, இந்திய சமூகநீதிப் போராட்டத்தில் முதல் களமாக விளங்கிய ‘வைக்கம் சத்தியாகிரக’ போராட்டத்தின் நூற்றாண்டு விழாவும் கொண்டாடப்படுகிறது.

கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்தில் உள்ளது மகாதேவர் கோவில். அந்தக் கோவிலைச் சுற்றி அமைந்துள்ள தெருக்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நடப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. அந்தத் தடையை நீக்கக் கோரி, வைக்கத்தில் பல கேரளத் தலைவர்கள் சத்தியாகிரகத்தை முன்னெடுத்தனர்.

அவர்களில் சிலர் அடுத்தடுத்து கைது செய்யப்பட, கேரளத் தலைவர்களின் அழைப்பின் பேரில், தந்தை பெரியார், வைக்கம் சென்று, அந்தப் போராட்டத்துக்குத் தலைமை ஏற்றார். பின்பு பல நாட்கள் அங்கு தங்கியிருந்து போராட்டத்தை ஒருங்கிணைத்து, அனைத்து மக்களிடமும் ‘வைக்கம் போராட்டம்’ குறித்துத் தமது சீர்திருத்த, சமூக நீதிக் கருத்துகள் மூலம் பிரச்சாரம் செய்து, வைக்கம் போராட்டத்தை வெற்றிப்பாதைக்கு அழைத்துச் சென்றார்.

### ஓராண்டு முழுவதும் நூற்றாண்டு!

அந்தப் போராட்டத்தில் அதிக நாள் சிறையில் இருந்த ஒரே தலைவர் பெரியார் மட்டும்தான். 1924 மார்ச் 30 ஆம் தேதி தொடங்கிய வைக்கம் போராட்டம், சுமார் 600 நாட்களுக்கு மேலாக நடைபெற்றது. 1925 நவம்பர் 23ஆம் தேதி, அந்தத் தடை நீக்கப்பட்டு போராட்டம் முடிவுற்றது. அந்த மகத்தான போராட்டத்துக்கு நூறு ஆண்டுகள் ஆகின்றன.

‘வைக்கம் போராட்டம் தொடங்கி, நூறாண்டுகள் நிறைவு பெற்றதையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் 2023 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் நாள் தொடங்கி, ஓராண்டு காலம் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படும்’ என்று நம் கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

மேலும் போராட்டத்தின் வரலாற்றையும், வெற்றியையும் பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுடன் சேர்ந்து கொண்டாடும் வகையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2023 மார்ச் 30 அன்று விதி 110-ன் கீழ் 11 அறிவிப்புகளை முதலமைச்சர் வெளியிட்டார்.




**வை**க்கத்தில் அமைந்துள்ள பெரியார் நினைவிடத்தை நவீனமுறையில் மறுசீரமைக்கவும், பெரியார் தொடர்பான நினைவுப் பொருட்கள் கூடுதலாக இடம் பெறுவதற்கும் 8 கோடியே 14 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது, ‘திராவிட மாடல் அரசு’. அந்த மறுசீரமைப்புப் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. படத்தில் காண்பது, அந்த நினைவிடத்தின் நவீன மாதிரி.

அது மட்டுமல்லாமல், தந்தை பெரியார் கைது செய்யப்பட்டு முதன்முதலாகச் சிறை வைக்கப்பட்டிருந்த ‘அருவிக்குட்டி’ கிராமத்தில் பெரியார் நினைவிடம் ஒன்றையும் உருவாக்க கழக அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது.

**வை**க்கம் போராட்ட நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் தொடர்பாக நமது முதலமைச்சர் அவர்கள் 110-விதியின் கீழ் வெளியிட்ட 11 அறிவிப்புகளில் சில...

- பிரபல எழுத்தாளர் பழ.அதியமான் எழுதிய ‘வைக்கம் போராட்டம்’ நூலின் மலையாள மொழிபெயர்ப்பை வெளியிடுதல். மேலும் அதை, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் மூலமாக தெலுங்கு, கன்னடம், ஆங்கில மொழிகளில் வெளியிடுதல்.
- எல்லை கடந்து சென்று வைக்கத்தில் போராடிய பெரியார் அவர்களை நினைவுகூரும் வகையில், பிற மாநிலங்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நலனுக்காகப் பாடுபட்டு, குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் ஆளுமைகள் அல்லது நிறுவனங்களுக்கு ஆண்டு தோறும் ‘வைக்கம் விருது’ சமூகநீதி நாளான செப்டம்பர் 17 ஆம் நாளன்று தமிழ்நாடு அரசால் வழங்கப்படுதல்.
- வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு நினைவாகச் சிறப்பு நினைவு அஞ்சல் தலை வெளியிடுதல்.
- வைக்கம் போராட்ட நூற்றாண்டு குறித்த விழிப்புணர்வை மாணவர்களுக்குக் கொண்டு சேர்க்கக்கூடிய வகையில், 64 பக்க நூல் ஒன்று அச்சு நூலாகவும், தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் ஒலிப் புத்தகமாகவும் வெளியிடுதல்.

இவை அனைத்தும் ஓராண்டு காலத்துக்குள் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, இவற்றில் பல அறிவிப்புகள் செயல் வடிவம் கண்டுள்ளன.

### வைக்கத்தில் விடியல்!

அந்த அறிவிப்பைத் தொடர்ந்து, 2023 ஏப்ரல் 1 -ஆம் நாள் வைக்கத்தில் நடைபெற்ற ‘வைக்கம் சத்தியாகிரகம்’ நூற்றாண்டு விழா’வில், மாண்புமிகு கேரள மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் அழைப்பின் பேரில், நமது முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டார்.

அப்போது உரையாற்றிய நமது தலைவர் அவர்கள், “1924 ஆம் ஆண்டு வைக்கத்தில் நடந்த போராட்டம் என்பது, கேரளத்தின் சமூக நீதி வரலாற்றில் மட்டுமல்ல, தமிழ்நாட்டு சமூக நீதி வரலாற்றிலும் மகத்தான போராட்டம். இன்னும் சொன்னால், இந்தியாவுக்கே வழிகாட்டிய போராட்டம்.

‘வைக்கம் போராட்டம்தான் ‘மகர்’ போராட்டத்தை நடத்துவதற்கு எனக்குத் தூண்டுதலாக அமைந்திருந்தது’ என்று அண்ணல் அம்பேத்கர் பிற்காலத்தில் எழுதினார்கள். வைக்கம் போராட்டத்தின் தூண்டுதலால்தான் தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களில், அண்ணல் காந்தியடிகள் அதிகம் கவனம் செலுத்தினார்கள்” என்றார். தொடர்ந்து எழுத்தாளர் பழ.அதியமான் அவர்கள் எழுதி, காலச்சுவடு பதிப்பகம் வெளியிட்ட ‘வைக்கம் போராட்டம்’ என்ற நூலின் மலையாள மொழிபெயர்ப்பை வெளியிட்டார். பிறகு அதே நூலின் கன்னட மொழிபெயர்ப்பை 2023 நவம்பர் 29 அன்று வெளியிட்டார்.

### விஜயன் வருகை!

இதைத் தொடர்ந்து, டிசம்பர் 28 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ‘வைக்கம் போராட்டம் நூற்றாண்டு சிறப்பு விழா’, சென்னை நந்தம்பாக்கம் வணிக மையத்தில் பிரமாண்டமாக நடைபெறுவதாக இருந்தது. ஆனால், எதிர்பாராத விதமாக, தேசிய முற்போக்குத் திராவிடக் கழகத்தின் தலைவர் விஜயகாந்த், காலமானார்.

ஆகவே, எப்போதும் அரசியல் நாகரிகத்தை விட்டுக்கொடுக்காத நம் தலைவர் அவர்கள், நந்தம்பாக்கத்தில் நடைபெறவிருந்த நிகழ்ச்சியை ரத்து செய்துவிட்டு, பெரியார் திடலில் மிக எளிமையான முறையில் நிகழ்ச்சியை நடத்திக் காட்டினார். அந்த நிகழ்ச்சியில் கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் கலந்துகொண்டார்.

அந்த நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத்துறையின் ‘தமிழரசு’ இதழ் சார்பாக தயாரிக்கப்பட்டுள்ள ‘வைக்கம் போராட்டம் (1924-2023) நூற்றாண்டு மலர்’ வெளியிடப்பட்டது. அதை நமது முதலமைச்சர் வெளியிட, கேரள முதலமைச்சர் பெற்றுக்கொண்டார்.

வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டுக் கொண்டாட்டங்கள் தமிழ்நாடு - கேரள மாநிலங்களின் உறவை பலப்படுத்துவது மட்டுமல்ல... தேசிய அளவிலான சமூகநீதி இயக்கங்கள், அரசியல் கட்சிகள் ஆகியவற்றின் கரங்களையும் வலுப்படுத்தும். ‘இந்தியா’வுக்கு விடியலைப் பெற்றுத் தரும்.

**...சாதனை தொடரும்**

## புத்தாண்டு முழக்கம்!




**தி**ராவிட இயக்கக் கொள்கைகளை மக்களிடையே எடுத்துச் சொல்வதற்காக 20 ஆம் நூற்றாண்டில் 300-க்கும் மேற்பட்ட இதழ்கள் தோன்றியதாகச் சொல்கிறார் திராவிட இயக்க வரலாற்றாளர் க.திருநாவுக்கரசு. திராவிட இயக்க வளர்ச்சிக்கு இவ்விதழ்கள் பெரும் பங்காற்றின. இதனால்தான் ‘எழுதியும் பேசியும் வளர்ந்த இயக்கம்’ என்பது திராவிட இயக்கத்துக்கான சொலவடையாகவே ஆகிப் போனது. திராவிட இயக்கத் தலைவர்களையும், அவர்கள் கொள்கைகளையும் மக்களையும் ஒன்றிணைக்கும் பாலமாக திராவிட இயக்க இதழ்கள் செயல்பட்டன.

இந்திய ஒன்றியத்தை மக்கள் விரோத பாசிச சக்திகள் சூழ்ந்துள்ள கால கட்டத்தில் இது போன்ற கொள்கை பேசும் இதழ்களின் தேவை அதிகம் இருப்பதை நம்மவர்கள் உணர்ந்தே இருக்கிறார்கள். புத்தாண்டில் ‘தமிழின ஆக்கம்! சமத்துவம் நோக்கம்!!’ என்ற லட்சியக் குரல் எழுப்பி பேராசிரியர் சுப.வீரபாண்டியன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு மாத இதழாக வெளிவருகிறது ‘திராவிட முழக்கம்’.

“முன் எப்போதைக் காட்டிலும், திராவிட முழக்கத்தின் தேவை இப்போது கூடியிருக்கிறது. அதனை உணர்ந்தே இந்த மாத இதழை இப்போது நாங்கள் தொடங்கி இருக்கிறோம்” என்கிறது இதழின் தலையங்கம். அதன் தேவையை உணர்ந்து வாங்கிப் படித்து நாம் அனைவரும் ’திராவிட முழக்கம்’ எழுப்புவது காலத்தின் தேவை!

## ஃப்ளாஷ்பேக்



### பெயரைக் குறிப்பிட்டு வாழ்த்து!



சம்பத்

1988 ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்வதற்காக தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது திருவாரூருக்கு வருகை தந்தபோது, திருவாரூர் நகர் மன்றம் சார்பாக மிகச் சிறப்பான வரவேற்பை வழங்கினோம். எங்களுடைய பெயரை எல்லாம் குறிப்பிட்டு நிகழ்வைச் சிறப்பாக ஒருங்கிணைத்திருப்பதாக வாழ்த்தினார். அவர் உரையாற்றும் போது அவர் அருகே நின்று நான் எடுத்துக் கொண்ட புகைப்படம் இது.

**-கு.சம்பத், நகர் மன்ற முன்னாள் உறுப்பினர், திருவாரூர்**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033 -24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கலைஞருக்கு அண்ணாவின் கடிதம்!

**1951-ஆம் ஆண்டு கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜி தஞ்சைக்கு செல்கிறார். அவருக்கு அறவழியில் கருப்புக்கொடி காட்ட கலைஞர் முடிவு செய்கிறார். அந்த அறப்போர் எப்படி நடைபெற வேண்டுமென்று, கலைஞருக்கு அண்ணா ஒரு கடிதம் அனுப்பினார். அன்புத் தம்பி என விளித்து அண்ணா, தன் கைப்பட அந்த கடிதத்தை அனுப்பியிருந்தார். அப்போது கலைஞருக்கு வயது 27. அந்த கடிதத்தை திருவாரூர் தென்னன் நீண்டநாள் பாதுகாப்பாக வைத்திருந்து, வார இதழ் ஒன்றில் வெளியிட்டார். பிறகு முரசொலியிலும் அந்தக் கடிதம் வெளியிடப்பட்டது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 346




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131